DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No	: CC No.194/2026	Date	: 17.08.2026
Deposition of Witness for	: **அ.சா.2**	Taluk	:
Name	: **திரு.சின்னண்ணன்**	Calling	:
Father Name	:	Religion	:
Village	:	Age	:

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.08.2026.
(எதிரி ஆஜர்).

அரசு தரப்பு முதல் விசாரணை :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், தேவூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.சக்திவேல், அவர்கள் வேறு அலுவல் பணிக்கு சென்றுவிட்டதால் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.04.2026 ம் தேதி, மாலை சுமார் 05.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.சக்திவேல், என்பவருடன், தலைமை காவலர் திரு.சேகரன் மற்றும் தலைமை காவலர் திரு.ராஜா ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, வட்ராம்பாளையம் வாய்க்கால்கரை அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு சந்தேகபடும் படியாக கையில் பாலித்தீன் சாக்குபையுடன் நின்றிருந்தவரை பிடித்து விசாரித்தபோது, பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து அவர் தனது பெயர் அண்ணாமலை, த/பெ.அய்யாங்குட்டி, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி, காவேரிப்பட்டி கிராமம், சங்ககிரி வட்டம், சேலம்

மாவட்டம் என்று கூறியவரை, மேலும் விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கள்ளத்தனமாக அரசு மதுபானத்தை வாங்கி வந்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 05.45 மணிக்கு கைது செய்தும், அவர் ஆஜர் செய்த 180 ML அளவு கொண்ட EXPRESS BRANDY – 12, BLACK PEARL BRANDY – 10 ஆக மொத்தம் 22 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த தலைமை காவலர் திரு.சேகரன் மற்றும் காவலர் திரு.ராஜா ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் தலைமை காவலர் திரு.சேகரன் மற்றும் காவலர் திரு.ராஜா ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32-ன் படி சம்பவ இடத்திலேயே அழித்தல் மகஜர் மூலம் அழிக்கப்பட்டது. மேற்படி அழித்தல் மகசரில் தலைமை காவலர் திரு.சேகரன் மற்றும் காவலர் திரு.ராஜா ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். **(அழித்தல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

4) பின்னர் கைது செய்த எதிரியை மாலை சுமார் 06.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.87/2026, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், எதிரியின்

மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை -

1) எதிரி கையில் என்ன பை வைத்திருந்தார் என்றால் பாலீத்தீன் சாக்குபை வைத்திருந்தார். அதனை கைப்பற்றினோமா என்றால் இல்லை. நாங்கள் ரோந்து சென்றபோது வழியில் எதிரியை தவிர வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை. எதிரி அவர் வைத்திருந்த மதுபானத்தை யாரிடமாவது விற்றதாக விசாரித்து வாக்குமூலம் பெற்றோமா என்றால் இல்லை. எதிரி மதுபானங்களை விற்ற பணத்தை அவரிடம் இருந்து கைப்பற்றினோமா என்றால் இல்லை.

2) சம்பவ இடமே செல்லவில்லை என்றும், எதிரியிடம் இருந்து மதுபானங்களை கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது பொய் புகார் பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Chinnannan Judicial Magistrate No.1,

Sankari.